## 2024 நாடாளுமன்றத் தேர்தல் 'இந்தியா கூட்டணி' வேட்பாளர்களை ஆதரித்து

கலைஞர் 100 1924 - 2023

# கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம்

2024 ஏப்ரல் 19–அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 'இந்தியா கூட்டணி' வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குகளை சேகரித்து வருகிறார். அவரின் 2–வது கட்ட தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயண விவரம் வருமாறு:–

**31.03.2024, ஞாயிற்றுக்கிழமை**

| வ.எண் | நேரம் | இடம் | நாடாளுமன்றத் தொகுதி |
|---|---|---|---|
| 1 | காலை 10.00 மணி | தெற்கு ரத வீதி, சிதம்பரம், கடலூர் கிழக்கு மாவட்டம் | சிதம்பரம் |
| 2 | காலை 11.30 மணி | சீமாட்டி சிக்னல், நான்கு முனை சந்திப்பு, கடலூர், கடலூர் கிழக்கு மாவட்டம் | கடலூர் |
| | | மதிய உணவு இடைவேளை | |
| 3 | மாலை 4.30 மணி | வில்லியனூர் கிழக்கு மாட வீதி சந்திப்பு, புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |
| 4 | மாலை 5.30 மணி | மரப்பாலம் சந்திப்பு, புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |
| 5 | இரவு 6.30 மணி | அண்ணா சதுக்கம், புதுச்சேரி, புதுச்சேரி மாநிலம். | புதுச்சேரி |

அன்பகம்
சென்னை – 18.
நாள் : 27–03–2024.

அரியலூரில் இருந்து ஜெயங்கொண்டம் செல்லும் வழியில் உள்ள அஸ்தினாபுரம் கிராமம் அருகே தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தமது காரில் ஜெயங்கொண்டம் சென்று கொண்டு இருக்கும் போது தேர்தல் பறக்கும் படையினர் அமைச்சரின் காரை வழி மறித்து சோதனை செய்தனர் . பின்னர் காரில் ஏதும் இல்லாததால் அங்கு இருந்து புறப்பட்டனர்.

### ஈரோடு, நாமக்கல், கரூர் தொகுதிகளின் வேட்பாளர்களை ஆதரித்து

# முதல்வர் மு.க.ஸ்டாலின் சின்னியம்பாளையத்தில் உரையாற்றுகிறார்!

### ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிக்கை!

*ஈரோடு, மார்ச் 31-*

ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நடைபெற இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலையொட்டி ஈரோடு, நாமக்கல், கரூர் ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட வாக்காளர்களிடம் வாக்குகள் சேகரிக்க முதலமைச்சரும், கழக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (31.3.2024-ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணியளவில் ஈரோட்டில் இருந்து முத்தூர் சாலையில் உள்ள சின்னியம் பாளையத்தில் நடைபெறும் பாசிசத்தை வீழ்த்த இந்தியாவை காக்க ஸ்டாலின் அழைக்கிறேன் எனும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

அதற்காக 30.3.2024 அன்று சனிக்கிழமை இரவு சேலத்தில் பொதுக் கூட்டத்தை முடித்து விட்டு ஈரோடு பெருந்துறை ரோட்டில் உள்ள சக்தி சுகர்ஸ் விருந்தினர் விடுதியில் தங்குகிறார்.

எனவே இன்று (31.3.2024 - ஞாயிற்றுக் கிழமை) மாலை நடைபெறும் பொதுக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., என்.கௌதமன் ஆகியோர் தலைமை!

# கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணி கட்சி செயல்வீரர்கள் கூட்டம்!

### உ.மதிவாணன் பங்கேற்பு!

*நாகை. மார்ச். 31*

நாகை மாவட்டம் கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளரும், தொகுதி கமிட்டி தலைவர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என். கௌதமன் ஆகியோர் தலைமை தாங்கினார்கள். தலைமைச் செயற்குழு உறுப்பினரும் கீழ்வேளூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ப. கோவிந்தராசன் வரவேற்றார். தாட்கோ தலைவர் உ.மதிவாணன், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகைமாலி, நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராசு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நாகை மாவட்டச் செயலாளர் வி.மாரிமுத்து, காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் ஆர்.என்.அமிர்தராஜா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் சிவகுருபாண்டியன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர்கள் நாக.அருள்செல்வன், சு.மா.செல்வராஜ், திராவிட கழக மாவட்ட தலைவர் வி.எஸ்.டி.ஏ. நெப்போலியன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாவட்ட தலைவர் முகமது ஆதம், மனித நேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் ஜபருல்லாஹக், ஓ.எஸ்.இப்ராஹீம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் தி.மு.க. சார்பில் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், நாகை தெற்கு ஒன்றியச் செயலாளர்கள் க. ராஜேந்திரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கீழ்வேளூர் தெற்கு கா.பழனியப்பன், கீழையூர் கிழக்கு ஆ.தாமஸ்ஆலவாஎடிசன், கீழையூர் மேற்கு சோ.பா.மலர்வண்ணன், பேரூர் கழகச் செயலாளர்கள் கீழ்வேளூர் கா.அட்சயலிங்கம், வேளாங்கண்ணி மரியசார்லஸ், திராவிடர் கழகத்தைச் சேர்ந்த பாவாஜெயக்குமார், பாக்கியராஜ், காங்கிரஸ் கட்சி சிங்காரவேல், காதர், ராஜ்குமார், லியோ, கருணாநிதி, ம.தி.மு.க. சிவானந்தம், உத்திராபதி, ரவி, ஆனந்த், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சுப்பிரமணியன், லதா, முருகையன், அபுபக்கர், முத்தையன், வெங்கட்ராமன், வடிவேல், ராஜா, அஜுஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சேர்ந்த சேகர், ராஜேஷ், பாவேந்தன், குணா, பாண்டியன் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் 'இந்தியா' கூட்டணி கட்சியின் நாகை நாடாளுமன்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளர் வை.செல்வராஜ் கதிர் அரிவாள் சின்னத்திற்கு வாக்குக் கேட்டு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி தெரிவித்து பேசினார்.

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமை ! சு.கல்யாணசுந்தரம் எம்.பி. வரவேற்புரை!

# மயிலாடுதுறையில் நாடாளுமன்ற செயல்வீரர்கள் கூட்டம்!.

### அமைச்சர்கள் அன்பில் மகேஷ்பொய்யாமொழி - சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!.

*மயிலாடுதுறை,மார்ச். 31-*

மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி கட்சிகளின் செயல் வீரர்கள் மற்றும் காங்கிரஸ் கட்சியின் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா அறிமுகக் கூட்டம் மயிலாடுதுறை சிக்னேச்சர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. செயல்வீரர்கள் கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., வரவேற்றார். மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், திருவிடைமருதூர் சட்ட மன்ற உறுப்பினரும், அரசு தலைமை கொறடா கோ.வி.செழியன், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், காங்கிரஸ் கட்சின் மாவட்ட தலைவர்கள் மயிலாதுறை எஸ்.ராஜ்குமார் எம்.எல்.ஏ., தஞ்சை டி.ஆர்.லோகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் பள்ளி கல்வித்துறை அமைச்சரும், திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் காங்கிரஸ் கட்சியின் மயிலாடுதுறை நாடாளுமன்ற வேட்பாளர் ஆர்.சுதாவை அறிமுகப் படுத்தி சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் என். இளையராஜா, மயிலாடுதுறை தொகுதி பார்வையாளர் ஜித்து (எ)ஆர்.ராஜரத்தினம், மாநில மாணவர் அணி துணைச் செயலாளரும், சீர்காழி சட்ட மன்ற தொகுதி பார்வையாளர் மன்னை த.சோழராஜன், கும்பகோணம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் வண்ணை அரங்கநாதன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி.சத்தியசீலன், எம்.எம். சித்திக், ஏ.சி.என்.விஜயபாலன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவிசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக. வீரப்பாண்டியன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில அயலக அணி துணைச் செயலாளர் இராம.விஜயன், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் ஆடுதுறை மு.உத்திராபதி, குடந்தை மாநகரச் செயலாளர், மாநகராட்சி துணை மேயர் சுப.தமிழழகன் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, இராம. இளங்கோவன், முத்துமகேந்திரன், குட்டி தெட்சிணாமூர்த்தி மயிலாடுதுறை மாவட்ட கூட்டணி கட்சி தலைவர்கள் மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பி.சினிவாசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஏ.சீனிவாசன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மோகன்குமார், தாமு.இனியவன், ம.தி.மு.க. சி.கொளஞ்சி, இந்திய யூனிஸ்யன் முஸ்லீம் லீக் என்.ஏ.எம். நூருல்லா, எம்.முஹம்மது சுல்தான், மனித நேய மக்கள் கட்சி முகமதுஜுபையர், ஏ. ஹிபாயத்துல்லா, மாவீரன் வன்னியர் சங்கம் வி.ஜிகே.மணி, மூவேந்தன் முன்னேற்றக் கழகம் ஜி.முனிபாலன், வி.செல்வப்பாண்டியன், மக்கள் நீதி மையயம் எம்.என்.இரவிச்சந்திரன், திராவிடக் கழகம் தளபதிராஜ், சு.துரைராசு, விவசாய தொழிலாளர் கட்சி ஆர்.சேகர், டி.,ஆனந்தன், இந்திய தேசிய லீக் ஆக்கூர் ஏ.ஷாஜகான், திருச்சம்பள்ளி ஏ.ஷாஜகான், தமிழக வாழ்வுரிமை கட்சி சி.ரமேஷ், செல்வம், சிவ சேனா கட்சி தா.சுந்தரவடிவேலன், தி.மு.க. நிர்வாகிகள் மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி. எம்.ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.இளையபொருமாள், மூவலூர் எம். மூர்த்தி, மங்கை எம்.சங்கர், செல்லசேதுரவிக்குமார், மலர் விழிதிருமாவளவன், ஏ.ஜி. ஜெ.பிரபாகரன், எம்.அப்துல் மாலிக், பி.எம்.அன்பழகன், ஞான.இமையநாதன், ப.முருகமணி, ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதி காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் ஆர். சுதா தனக்கு கை சின்னத்தில் வாக்கு கேட்டும் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி தெரிவித்து பேசினார்.

ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் கே.இ.பிரகாஷ் அறிமுக கூட்டம் ஈரோடு ஜவகர் இல்லம் காங்கிரஸ் அலுவலகத்தில் ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில இலக்கியஅணி செயலாளர் வீரமணி, மாவட்டக் கழக துணைச் செயலாளர் ஆ.செந்தில்குமார், மாநகரக் கழகச் செயலாளர் மு.சுப்பிரமணியம், காங்கிரஸ் மாவட்ட தலைவர் ஈ.பி.ரவி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி 'இந்தியா' கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் கே.இ.பிரகாஷ் அறிமுகக் கூட்டம் மொடக்குறிச்சி ஒன்றியம் கொடுமுடியில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி முன்னிலையில் நடைபெற்றது, கூட்டத்தில் கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் வி.சி.சந்திரகுமார், மாநில இலக்கியஅணி செயலாளர் வீரமணி, காங்கிரஸ் மக்கள் ராஜன், மாவட்ட கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், கொடுமுடி ஒன்றிய கழக செயலாளர் மு.சின்னசாமி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.